என்று தெரிவிப்பதோடு இந்த அறிக்கையைப் பெறுவதற்குமுன் இடைப்பட்ட காலத்திலேயே தொடர்ந்து கூவத்தால் பாதிப்பு வரும் என்ற காரணத்தால் தற்காலிகமாக அந்தக் கூவம் நாற்றத்தையும், அதனால் ஏற்படும் கேடுகளையும் தவிர்ப்பதற்கு கடல்நீரை கூவத்திற்குள் பம்பிங் செய்து மிக வேகமான முறையில் புளோ ஆகிறபோது இவற்றினுடைய கேடுகள் குறையும் என்ற காரணத்தால் இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வுக்கு நாள்கள் காலவரையறை வைக்கவில்லை. உறுப்பினருடைய உணர்வைப் புரிந்துகொண்டிருக்கிறோம். மிக விரைவாக அந்த ஆய்வினுடைய முடிவு வாங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தலைமைச் செயலாளருடைய தலைமையிலே போடப்பட்டிருக்கிற அந்தக் குழு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு கூடி போதிய நடவடிக்கைகளை, எடுக்கவேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. கடல்நீரை கூவத்திலே பம்புசெய்து கூவத்தை சுத்தப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். 150 கன அடி கடல்நீரை கூவத்திலே பம்ப்செய்து கோயம்பேடு பகுதியிலே கடல்நீர் ஆற்றிலே ஓடக்கூடிய திட்டத்தை செயல்படுத்த சுமார் 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிலே பொதுப்பணித்துறை ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) திருவாரூர் பகுதி திருப்பள்ளி முக்கூடல் வாய்க்கால் தலைப்பு மேடிட்டுள்ளது.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் அருகிலுள்ள திருப்பள்ளி முக்கூடல் வாய்க்காலின் தலைப்பு நவீனப்படுத்தப்பட்டதால் மேடிட்டு அவ்வூரில் பாசனம் பாதிக்கப்பட்டிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1987 மார்ச் 27]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

ஓடம் போகியார் ஆற்றில் திருவாரூர் எல்லையில் சுக்கனார் வாய்க்கால் என்னும் வாய்க்கால் பிரிகிறது. இதன் நீளம் 12.57 கி.மீ. இதன் பாசனப் பரப்பு 2,191 ஏக்கர்கள். சுக்கனார் வாய்க்காலின் கீழ் 17 பிரிவு வாய்க்கால்கள் உள்ளன. இதன் பி. 10-வது கிளை வாய்க்கால் திருப்பள்ளி முக்கூடல் வாய்க்காலாகும். 5.60 கி.மீ. நீளமுள்ள இவ்வாய்க்காலின் பாசனப்பரப்பு 126 ஏக்கர்களாகும். இவ்வாய்க்கால்கள் சுமார் 18 ஆண்டுகளுக்கு முன் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்டது.

சுக்கனார் வாய்க்காலில் சிமெண்ட் பலகைகள் பொருத்தி லைனிங் செய்யும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல் முறையில் உள்ளன. இதுவரை பிரதான வாய்க்காலில் 4.25 கி.மீ. வரையிலும் மற்றும் முதல் இரண்டு கிளை வாய்க்கால்களிலும் லைனிங் வேலை எடுத்து செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகள் வருங்காலங்களில் படிப்படியான செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். இப்பணிகள் அனைத்தும் முடிந்தவுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் முழுமையாக நிவர்த்திக்கப் படும்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாய்க்கால்களை நவீனப்படுத்துவதற்காக முதலிலே தலைப்புப் போடுகிறார்கள். தலைப்பு எடுக்க வேண்டியதன் விளைவாக, லெவல் எடுப்பது சரியோ, தவறோ எனக்குத் தெரியாது. லெவல் எடுக்கும்போது அதிலே பெட்லைன் செய்கின்ற காரணத்தினாலே தலைப்பிலே உயரம் அதிகமாகி விட்டது. தலைப்பின் உயரம் அதிகப்படுத்தப்பட்டதன் காரணத்தினாலே வாய்க்காலின் நீளம் மிகக் குறைவாக இருக்கிறது. அதனாலே கடைமடைக்குத் தண்ணீர் செல்லவில்லை. அறிக்கையிலே, கடைசியிலே அது சரியாகும் என்று சொல்கிறார்கள். தலைப்பிலே இருக்கிற லெவலிலே, மேடிட்ட இடத்தைப் பள்ளப்படுத்தி வாட்டர் லெவலை ஒழுங்காக முறைப்படுத்தி முன்கூட்டியே அதைச் செய்தால்தான் பாசனம் சரியாகும்.

[திரு. மா. மணிமாறன்] [1987 மார்ச் 27

எனவே கடைசிவரை பார்க்காமல் முன்கூட்டியே அந்தத் தலைப்பை சீர் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டப் பகுதியில் ஏறத்தாழ 36 ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகளிலிருந்து பிரிகிற முதல் பிரிவுகளுக்கெல்லாம் "ஏ" பிரிவு சேனல்கள் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் அதிலிருந்து பிரிகிறவைகளுக்கு "பி" கிளாஸ் சேனல்கள் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது "பி" கிளாஸ் சேனல்களைத்தான் மாடர்னைசேஷன் செய்து கொண்டு வருகிறோம். அதிலே குறைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறைகள் இருந்தால் உடனடியாக அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

THIRU T. VENKATA REDDY : On behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee :

(1) Forty-fourth Report on the further action taken by the Government on the recommendation contained in the 19th Report of the Committee (1982-83) and the 5th Report of the Committee (1977-78) on the Report of the Comptroller and Auditor-General of India for the year 1973-74.

(2) Forty-fifth Report of the Committee on the paragraphs pertaining to Public Works Department in the Report of the Comptroller and Auditor-General of India for the year 1979-80 (Civil).

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித்துறை பற்றிய பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கையை நான் இப்பேரவைக்கு அளிக்கிறேன்.